



# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண் - 31

## அறிவிப்புகள்

## 2017-2018

(IT/B4)

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண் – 31

அறிவிப்புகள்

2017-2018

**டாக்டர் எம்.மணிகண்டன்**

தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்

1. மாநில அரசு நலத்திட்டங்களின் தரவுத் தொகுப்புகளைப் பரிமாறிக் கொள்ள தமிழ்நாடு அரசின் **"வெளிப்படையான அரசு தரவு வலைதளம்"** (Open Government Data) திட்டத்தை அனைத்து அரசுத் துறைகளிலும் செயல்படுத்துதல் மற்றும் அதன் தரவுகளைப் பயன்படுத்தி மென்பொருள் போட்டிகள் (Hackathons) நடத்துதல்

(Implementing 'Open Government Data' in all Government Departments for sharing data pertaining to Government Welfare Schemes and conducting Hackathons using this data)

அரசின் செயல்பாடுகளில் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கும் வகையில் **"வெளிப்படையான அரசு தரவு வலைதளம்"** ஒன்றினை மத்திய அரசு உருவாக்கியுள்ளது. அதைப் போன்ற https://tn.data.gov.in என்ற ஒரு வலைதளத்தினை தமிழக அரசுக்காக தேசிய தகவலியல் மையம் (National Informatics Centre - NIC) உருவாக்கவுள்ளது.

இந்த வலைதளத்தில் கல்வி, போக்குவரத்து, சுகாதாரம் போன்ற தமிழக அரசுத் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு சமூக, பொருளாதார நலத்திட்டங்கள் குறித்த தரவுத் தொகுப்புகள், ஆவணங்கள், சேவைகள் போன்றவை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் வெளியிடப்படும்.

பொதுமக்கள் இந்த வலைதளத்தில் வெளியிடப்படும் அரசின் தரவுத் தொகுப்புகளை கட்டணமின்றி அணுக இயலும். மேலும், இவ்வலைதளத் தரவுகளைப் பயன்படுத்தி அரசு மற்றும் பொதுமக்களுக்குப் பயன்தரும் பல புதுமையான மென்பொருள் பயன்பாடுகள் மற்றும் கைபேசி செயலிகள் உருவாக்கிட மாநில மற்றும் மாவட்ட அளவிலான மென்பொருள் போட்டிகள் (Hackathons) நடத்தப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** இத்திட்டம் தமிழ்நாடு மின்



ஆளுமை முகமை மற்றும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் ரூ. 2 கோடியே 12 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

அரசு தரவு தொகுப்பின் இந்த வெளிப்படைத்தன்மை சிறந்த தரவு ஆளுமையை மக்களுக்கு அளித்திட அரசுக்குப் பெரிதும் துணைபுரியும்.

2. டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குனரகம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உள்ள ஓலைச்சுவடிகளை மின்னுருவாக்கம் மற்றும் அட்டவணைப்படுத்தல் (Digitization and Cataloguing of Palm-leaf manuscripts in Dr.U.V.Swaminatha Iyer Library, Directorate of Indian Medicine & Homoeopathy and International Institute of Tamil Studies)

டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூலகம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குனரகம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழர் பண்பாடு, மொழி, மற்றும் மருத்துவம் தொடர்புடைய அரிய ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இவற்றை உலகத் தமிழர்க்கு இணையவழியில் (website) அளித்திடும் வகையில் மின்னுருவாக்கம் (digitization)



மற்றும் அட்டவணைப்படுத்தல் (cataloguing) செய்து தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இணையதளத்தில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இத்திட்டம் ரூ. 1 கோடியே 5 இலட்சம் செலவில் தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் செயல்படுத்தப்படும்.

## 3. தமிழ் உரை மற்றும் பேச்சு செயலாக்க மென்பொருள் உருவாக்கம் (Creation of Tamil Text and Speech Computing Tools)

வகுப்பறையில் தமிழ் கற்பித்தல் மற்றும் கற்றலில் ஐயப்பாடுகளை உடனுக்குடன் தீர்வு செய்வது போல், கணினி வழி கற்றலிலும் ஐயப்பாடுகளை தீர்வு செய்திடும் வகையில், மொழியியல் தொழில்நுட்பத்துடன் கூடிய நவீன தமிழ் உரைக்கான சிறந்த **“இலக்கணச் சரிபார்ப்பு மென்பொருள்”** ஒன்று உருவாக்கப்படும்.

இந்த இலக்கணச் சரிபார்ப்பு மென்பொருள், தமிழ் உரையில் உள்ள பிழைகளைக் கோடிட்டுக் காட்டுவதோடு மட்டுமன்றி, அப்பிழைகளைத் திருத்திடப் பரிந்துரையையும் வழங்கும்.

சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் தமிழ் சொற்களஞ்சியம் மற்றும் இலக்கண விதிமுறைகளைக் கற்றுத்



தெளிவதற்கு இந்த நவீன தமிழ் உரைக்கான இலக்கணச் சரிபார்ப்பு மென்பொருள் உதவும்.

மேலும், பார்வையற்றோர் / மாற்றுத் திறனாளிகளுக்கு வலைதளங்களில் உள்ள தமிழ் உரைகளை வாசித்துக் காட்டி, அவர்களால் கணினியில் எளிதாக உள்ளீடு செய்ய உதவிடும் வகையில் **“பேச்சு செயலாக்க மென்பொருள்”** ஒன்று உருவாக்கப்படும்.

இயற்கை மொழி ஆய்வின் அடிப்படையிலான இயந்திர மொழி பெயர்ப்புக்கும், உரையில் உள்ள பிழைகளை அகற்றி பொருளின் அர்த்தத்தை மேம்படுத்தவும் மற்றும் எழுத்துப் பிழைகளை நீக்கவும் இம்மென்பொருள் பயன்படும்.

இவை மட்டுமன்றி, பார்வையற்ற/ மாற்றுத் திறனாளிகள் தமிழ் மொழியில் போட்டித் தேர்வுகளை எழுதவும், வலைதளங்களில் உள்ள தமிழ் ஆவணங்கள் மற்றும் உள்ளடக்கங்களை அவர்களுக்குப் படித்துக்காட்டவும், அவர்கள் இம்மென்பொருளில் உள்ள தட்டச்சு உதவிக்

கருவி வழியாக உள்ளடக்கத்தைத் தட்டச்சு செய்வதற்கும், ஆவணங்களை ஏற்படுத்தவும் பெரிதும் துணைபுரியும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இந்த இரண்டு மென்பொருட்களும் ரூ. 70 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் உருவாக்கப்படும்.



## 4. கணினிக் கல்வியறிவற்ற 26.79 இலட்சம் கிராமப்புற மக்களுக்கு ரூ. 80.37 கோடி செலவில் கணினிப் பயிற்சி

(IT training to 26.79 lakh digitally illiterate rural public at a cost of Rs. 80.37 crore)

கிராமப்புற மக்களையும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான சாதனங்களைப் பயன்படுத்தச் செய்வதன் மூலமே டிஜிட்டல் இடைவெளியை (Digital Divide) அகற்றிட இயலும் என்பதை நன்கு உணர்ந்துள்ள அம்மாவின் அரசு கணினிக் கல்வியறிவற்ற கிராமப்புற மக்களுக்கு கணினிக் கல்வியறிவு அளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தவுள்ளது. மத்திய அரசின் பிரதம மந்திரி கிராமப்புற மக்களுக்கான கணினிப் பயிற்சித் திட்டத்தின் (Pradhan Mantri Gramin Digital Saksharta Abhiyan-PMGDISHA) ஓர் அங்கமாக செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டம், இரண்டு ஆண்டுகளில் முழுமையாக நிறைவேற்றப்படும்.

இத்திட்டத்தின் மூலம் 26.79 இலட்சம் கிராமப்புற மக்கள் பயன்பெறுவர்.

தாழ்த்தப்பட்டோர் (SC) / பழங்குடியினர் (ST), வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் (BPL), பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் சிறுபான்மையினர் போன்ற சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர் உட்பட அனைத்து கிராமப்புற மக்களையும் இலக்காகக் கொண்டு செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டத்தில் கணினி, கையடக்கக் கணினி மற்றும் திறன்பேசி உள்ளிட்ட மின்னணு சாதனங்களை இயக்குதல், இணையதள உபயோகம், மின்னஞ்சல் பயன்பாடு, அரசு சேவைகளை அணுகிப் பெறுதல், தகவல் தேடல், மின்னணுப் பணப்பரிவர்த்தனை முறை குறித்த பயிற்சிகள் கிராமப்புற மக்களுக்கு வழங்கப்படும். இதன் மூலம் நாட்டின் வளர்ச்சிக்கான பெரும்பணியில் அவர்களைத் தீவிரமாக பங்கேற்கச் செய்திட இயலும்.

மாவட்ட மின் ஆளுமை சங்கங்கள் (District e-Governance Societies), ஊரக,



உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பள்ளிகளின் ஒத்துழைப்புடன் ஒரு குடும்பத்திற்கு ஒரு பயனாளர் என்ற வீதத்தில், நபர் ஒன்றுக்கு ரூ.300/- என்ற செலவினத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் பயிற்சி அளிக்கப்படும்.

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** இத்திட்டம் ரூ. 80 கோடியே 37 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்தப்படும்.

5. மக்கள் அரசை எளிதில் தொடர்பு கொண்டு கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள "நமது அரசு" (namadhuarasu.in) என்ற வலைதளம் உருவாக்கம்
(Creation of a portal "namadhuarasu.in" to enable common public to share their views with Government)

தமிழக மக்கள் அனைவரும் வலைதளம் வாயிலாக கருத்துக் கணிப்புகள், ஆய்வுகள், விவாதங்கள் போன்றவற்றில் ஆர்வத்துடன் பங்கேற்று அதன் மூலம் தமது கருத்துகளை சுதந்திரமாகவும், வெளிப்படையாகவும் வலைப்பதிவுகள் மூலமாக அரசுக்குத் தெரிவிக்க உதவும் வகையில் "நமது அரசு" (namadhuarasu.in) என்ற பொதுமக்களுக்கான தமிழக அரசின் வலைதளம் **மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** மின் ஆளுமை ஆணையரகம்/ தமிழ்நாடு மின் ஆளுமை முகமையினால்



ரூ. 2 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் மத்திய அரசின் தொழில்நுட்ப உதவியுடன் உருவாக்கப்படும்.

இவ்வலைதளம் அரசுக்கும் பொதுமக்களுக்கும் இடையேயான உறவை மென்மேலும் வளர்த்திட பெரிதும் உதவும்.

**டாக்டர் எம்.மணிகண்டன்**
தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்

## அமைதி – வளம் – வளர்ச்சி

" தமிழ்நாடு, பொறுப்பான மற்றும் வெளிப்படையான ஆளுமையால் முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் அனைத்து தரப்பு மக்களுக்கும் சம வாய்ப்பு என்ற போற்றத்தக்க ஒரு கலாச்சாரத்தை எட்டும்".

தொலை நோக்கு பார்வை – 2023

- மாண்புமிகு புரட்சித்தலைவி

**அம்மா** அவர்கள்